I Additional District Court, Thoothukudi.

**O.S.No.79/2024 நாள் : 26.02.2026 வா.சா.1– திருமதி. மணிமாலா.**

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

வாதி என் கணவர். 1ம் பிரதிவாதி அவரது தங்கை. என் பெற்றோர் சொந்த ஊர் அருப்புக்கோட்டை. எனக்கும் வாதிக்கும் 2000ம் ஆண்டு திருமணமானது. எனக்கு இரண்டு குழந்தைகள். என் குழந்தைகள் பள்ளி படிப்பை முடித்துவிட்டார்கள். இரண்டு, மூன்று இடங்களில் பள்ளி படிப்பை முடித்தார்கள். கடைசியாக கோவையில் பள்ளி படிப்பை முடித்தார்கள். ஜூன் 2015 முதல் நாங்கள் கோவையில் குடியிருந்து வருகிறோம். நாங்கள் வசிக்கும் வீடு எங்கள் சொந்த வீடு. வாதி கோவையில்தான் இருக்கிறார். வாதியின் தகப்பனார் வோளண் துறையில் உதவி வேளாண் அலுவலராக இருந்து ஓய்வு பெற்றுவிட்டார் என்றால் ஓய்வு பெற்றது தெரியும். என்ன பணியில் இருந்து ஓய்வு பெற்றார் என்று எனக்குத் தெரியாது. வாதியின் தாயார் அரசு ஆசிரியராக இருந்து பணியில் இருந்து ஓய்வு பெற்றவர். வாதி பொறியியல் பட்டதாரி. 1ம் பிரதிவாதி முனைவர் பட்டம் பெற்றுள்ளார். 1ம் பிரதிவாதியின் கணவரும் பொறியியல் பட்டதாரிதான். 1ம் பிரதிவாதியின் கணவர் ஜிண்டா நிறுவனத்தில் மேலாளராக பணியில் இருந்தார். பிறகு பெங்களூருவில் ஆரோ எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார் என்றால் எனக்குத் தெரியாது. வாதி எப்போதெல்லாம் வெளிநாடு சென்று வந்தார் என்பது அவரது கடவுச் சீட்டை பார்த்தால் தெரியும். என் கணவர் சராசரியாக ஆண்டிற்கு எட்டு முறை இந்தியா வந்து செல்வார் என்றால் அவரது வேலையைப் பொறுத்து வருவார். ஆண்டிற்கு தோராயமாக ஐந்து முறை வந்துசெல்வார். 1ம் பிரதிவாதி 30.05.2018ல் தாவா சொத்தினை பூமாடத்தியிடமிருந்து கிரையம் பெற்ற விபரம்

06.02.2023 ல்தான் வாதிக்கு தெரிய வந்ததாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கான கிரைய பத்திரம் அசல் 1ம் பிரதிவாதியிடம் உள்ளது. தாவா சொத்திற்கு 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டு அவர்தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்திற்கான கிரையத்தொகை ரூபாய் 46 லட்சம் அதில் ரூபாய் 20 லட்சத்தை தலா ரூபாய் 10 லட்சம் வீதம் சொத்தின்முந்தைய உரிமையாளரின் மகனான இன்னாசி முத்து என்பவருக்கு இரண்டு முறை அனுப்பினார். மீதமுள்ள தொகையான ரூபாய் 26 லட்சத்தை 1ம் பிரதிவாதி கொடுத்தார். அந்த பணத்தை வாதி 1ம் பிரதிவாதி பெயரில் மாற்றிய நிறுவன பங்குகளை விற்று 1ம் பிரதிவாதி கொடுத்தார். அந்த தொகையை வாதி தனது வங்கி மூலமாக 1ம் பிரதிவாதியின் வங்கி கணக்கிற்கு அனுப்பியதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். வாதி தன் நிறுவன பங்குகளை 1ம் பிரதிவாதிக்கு வங்கி மூலம் மாற்றியுள்ளார். மே 2018 ல் மேற்படி பங்குகளை 1ம் பிரதிவாதி விற்று தாவா சொத்துக்களை வாங்கினார். 1ம் பிரதிவாதி மேற்படி பங்குகளை யாருக்கு விற்றார் என்று எனக்குத் தெரியாது. அந்த விபரங்களை வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியிருக்கிறேனா என்றால் மொத்த கிரைய தொகை ரூபாய் 46 லட்சம் என்று சொல்லவில்லை. வா.சா.ஆ 2 ல் தாவா சொத்தின் கிரையத் தொகை ரூபாய்.7,09,750/- என்று காட்டப்பட்டுள்ளது. வா.சா.ஆ 2 ல் கிரைய முன்பணம் கொடுத்ததாக வாசகம் இல்லை என்றால் 23.03.2018 ல் அட்வான்சாக பெற்றுக் கொண்ட தொகை ரூபாய் 5 ஆயிரம் என்று அதில் சொல்லப்பட்டுள்ளது. வாதி 1ம் பிரதிவாதியிடம் தாவா சொத்தை எழுதிக் கேட்டதாக வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்குரையில் என் கணவர் கோவில்பட்டியில் குடியிருப்பதாக காட்டப்பட்டுள்ளது. ஆனால் வாதியின்

நிரந்தர குடியிருப்பு கோவையில் உள்ளது என்றால் சரிதான். ஊருக்கு அருகில் தோட்டம் விலைக்கு வாங்க வேண்டுமென்று வாதி 1ம் பிரதிவாதியிடம் கூறியதாக வழக்குரையில் சொல்லியிருப்பது உண்மையல்ல என்றால் சரியல்ல. வாதி வெளிநாட்டில் இருப்பதால் அவர் வரமுடியாத சூழ்நிலையில் இருந்ததாகவும், அதனால் 1ம் பிரதிவாதி பெயருக்கு கிரையம் பெற்றுக் கொண்டு வாதி பெயருக்கு பெயர் மாற்றிக் கொடுக்குமாறு 1ம் பிரதிவாதியிடம் கேட்டுக் கொண்டதாக வழக்குரையில் சொல்லியிருப்பது உண்மையல்ல என்றால் சரியல்ல.

நீதிமன்ற கேள்விக்கான பதில்

வாதி தன் மனைவியான எனக்கு பணம் அனுப்பாமல் ஏன் 1ம் பிரதிவாதிக்கு அனுப்பினார் என்றால் சொத்து கோவில்பட்டியில் இருப்பதாலும், 1ம் பிரதிவாதியும் கோவில்பட்டியில் இருப்பதாலும் 1ம் பிரதிவாதிக்கு பணம் அனுப்பினார்.

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வாதியின் தகப்பனார் கோவில்பட்டியில்தான் இருக்கிறார். வாதியின் தாயார் 2006 ல் இறந்துவிட்டார். 10.01.2023 வாதி 1ம் பிரதிவாதியிடம் தாவா சொத்தைப் பற்றி கேட்டதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. வாதியின் பங்குகளை 1ம் பிரதிவாதிக்கு மாற்றியதாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வாதியிடம் 1ம் பிரதிவாதி பெயரில் சொத்து வாங்குவதற்கு பண உதவி செய்யுமாறு கேட்டு பிறகு அதை திருப்பி கொடுப்பதாக 1ம் பிரதிவாதி சொன்னதன் அடிப்படையில் வாதி பணம் அனுப்பினார் என்றால் சரியல்ல. வாதி கொடுத்த பணத்தை 1ம் பிரதிவாதி வாதிக்கு வங்கி பரிவர்த்தனை மூலமாக திருப்பி கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை 1ம் பிரதிவாதி

பூமாடத்தியிடமிருந்து கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். கிரைய பத்திரத்தின் நகலை வாதி மோசடியாக 1ம் பிரதிவாதியிடமிருந்து எடுத்துச் சென்று பணம் பறிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி ஜிவிஎன் கல்லூரியில் பணி செய்து வந்தார் என்றால் சரிதான். தாவா சொத்தில் வாதிக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. இதேபோன்ற வழக்கை வேறு சொத்துக்களை பொறுத்து 1ம் பிரதிவாதிமீது விருதுநகர் நீதிமன்றத்தில் வாதி தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளோம். வழக்கு காலவரை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதியின் கோரிக்கை பினாமி தடைச்சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆகவே தாவா தள்ளுபடியாக வேண்டுமென்றால் சரியல்ல.

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.26 17:54:40 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.